# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ வைகாசி 1978 ★ இதழ் - 29

ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர்:

## கணிதமேதை அலன் ஆபிரகாம் அவர்கள்

**1865 — 1922**

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிப் புகழ் பூத்து விளங்கிய தமிழ்ப் பெரியார்களுள் பேராசிரியர் அலன் ஏபிரகாம் B. A., F. R. A. S. அவர்களும் ஒருவர். கணிதம், விஞ்ஞானம், வானசாஸ்திரம் ஆகிய துறைகளில் ஆற்றல் வாய்ந்தமையோடு எழுத்தாற்றலும் நிரம்பப்பெற்ற உத்தமர் அலன் ஆபிரகாம் அவர்கள்.

தெல்லிப்பழையில் இருந்த பயிற்சிக் கல்லூரியில் கல்வி பயின்றபின் வட்டுக்கோட்டை சாஸ்திரசாலையில் கற்றுத் தேர்ந்து, கல்கத்தா சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற அவர், வட்டுக்கோட்டையில் ஆசிரியராயும் பின்னர் பேராசிரியராயும் இருந்தார். கணிதத் துறை போன வல்லுனரான அவர் பொழுது போக்காக வானசாஸ்திரத்தையும் அறிந்து கிரகங்கள், நட்சத்திரங்களை ஆராய்ந்துவந்தார்.


அக்காலத்தில் 1910ஆம் ஆண்டளவில் விண்வெளியில் பெரிய பரபரப்பை உண்டாக்கிய ஹாலி வால்வெள்ளியைப்பற்றி உலக விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்தார்கள்.

வால் வெள்ளிகள் வழக்கமாக கோடிக்கணக்கான மைல்கள் நீளமுள்ள வால் அல்லது வால்கள் உள்ளன. அவற்றின் வால்கள் விண்வெளியில் உள்ள பல கிரகங்களின் இடத்தை அளந்து அப்பாலுக்கப்பாலும் நிலவுந் தன்மையுள்ளவை.

பழையகாலத்து மக்கள் வால்வெள்ளி தோன்றினுல் நாட்டின் பெரியவர் மறைவர் என்றும் கருதினர்.

ஹாலி வால்வெள்ளியை முதலில் ஆராய்ந்தவர் எட்மன்ஹாலி (1656—1742) என்பவராவர். எனவேதான்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



மில்க்வைற் செய்தி ஆசிரியர் க. சி. குலரத்தினம் அவர்களுக்குப் ''பல்கலைப் புலவர்'' என்னும் பட்டமளித்துப் பதக்கஞ் சூட்டும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்களும், மில்க்வைற் தொழிலதிபரும், அவர் தமையனுர் திரு. க. இரத்தினகோபால் அவர்களும்.

★ பொறுமையின் நடை ஒழுக்கம் ★

உ




## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

திருவண்ணாமலை — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பிறையணி முடியினனே பிஞ்ஞகா பெண்ணோர் பாகா
மறைவலா விறைவாவண்டார் கொன்றையாய் வாமதேவா
அறைகழல் அமரரேத்து மணியண்ணா மலையுளானே
இறைவனே யுன்னையல்லா லியாதுநா னினைவிலேனே.

பிறைசூடிய சடைமுடிக் கடவுளே, தலைக்கோலத் தானே, உமாதேவியாரைப் பாகத்திலே கொண்ட பாதியனே, நான்கு வேதங்களையும் அருளிய வன்மையாளனே, மறைப் பொருளாய் உள்ளவனே, எப்பொருளிலும் நீங்காதுறைபவனே, வண்டுகள் மொய்க்கின்ற திருக்கொன்றை மாலையணிந்தவனே, இடப்பாகத்தில் தேவியைக் கொண்டருளியவனே, தேவர்கள் பணிந்தேத்தும் வண்ணம் ஒலிக்கின்ற வீரகண்டையணிந்த திருவடிகளையுடைய திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள இறைவா தேவரீரையல்லாமல் வேறொன்றையும் மனத்திலே நினைக்கமாட்டேன்.




## வினைசெயல் வகை

மனஉறுதி உடையவர்கள் செயல்களைச் செய்யுந்திறம்

பொருள் கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

ஒரு காரியத்தைச் செய்யும்போது அதற்கு வேண்டும் பொருளும், துணைக்கருவியும், செய்தற்குரிய காலமும், செய்கையின் தன்மையும், செய்யும் இடமும் ஆகிய ஐந்தினையும் குற்றமற ஆராய்ந்து அதனைச் செய்தல் வேண்டும்.

### Efficiency in Administration

Consider without being deluded, these five: the means, the instruments, the time, the action and the place and then resort to action.

## 1978 மே மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திங்கள் | — | தொழிலாளர் தினம். |
| 2 | செவ்வாய் | — | திருநாவுக்கரசு நாயனர் குருபூசை. |
| 3 | புதன் | — | ஏகாதசி விரதம். |
| 4 | வியாழன் | — | பிரதோஷ விரதம். |
| 6 | சனி | — | அமாவாசை விரதம் |
| 7 | ஞாயிறு | — | அக்கினி நாள் ஆரம்பம். |
| 8 | திங்கள் | — | கார்த்திகை விரதம். |
| 18 | வியாழன் | — | ஏகாதசி விரதம். |
| 20 | சனி | — | பிரதோஷ விரதம். |
| 21 | ஞாயிறு | — | வைகாசி விசாகம். |
| 22 | திங்கள் | — | பூரணை விரதம். |
| 24 | புதன் | — | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் குருபூசை. |
| 28 | ஞாயிறு | — | அக்கினி நாள் முடிவு. |
| 30 | செவ்வாய் | — | இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கொடியேற்றம். |

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கணிதமேதை........

அதற்கு அவரின் பெயர் சூட்டப்பெற்றது. அற்புதமான ஹாலி வால்வெள்ளி தோன்றும் காலத்தை மேற்குத்தேய விஞ்ஞானிகள் தங்கள் உபகரணங்களைக் கொண்டு வெகு நுட்பமாகக்கணித்து அது இன்ன நாள்களில் இவ்வண்ணம் தோன்றும் என்று வெளியிட்டனர்.

ஆனால் அலன் ஆபிரகாம் அவர்கள் தம் சொந்தத் தயாரிப்பான மட்டைகள் கோடுகள் கொண்டு அது இன்ன நாளில் இவ்வண்ணம் தோன்றும் என்று வெளியிட்டார்.

எல்லோரும் எதிர்பார்த்த வண்ணம் வால்வெள்ளி தோன்றிற்று. ஆனால் அலன் கணித்த நாளிலே அவர் கணித்த வண்ணமே அது தோன்றி நிலவியது. இதனை அறிந்த மேற்கு நாட்டவர் கிழக்குத்தேயக் கணித மேதையை மெச்சினர்கள் வியந்தார்கள் போற்றினர்கள்.

இதுகாறும் தேயிலைக்கும் இறப்பருக்கும் தேங்காய்க்கும் புகழ் பெற்ற இலங்கை வானமண்டலத்தையும் அளக்கக் கூடிய பெருமையுடையதை அறிந்தார்கள். அன்புமீதூர அவருக்கு ஆசிகள் கூறி அவரை இராசாங்க வானசாஸ்த்திர மன்றத்து கௌரவ அங்கத்தவராகப் பதிந்து மதித்தார்கள். இலங்கையில் மூதல் முதலாக F. R. A. S. பட்டம் பெற்ற பெருமகனர் காரைநகருக்குரிய ஆபிரகாம் அவர்களாவர்.

ஆபிரகாம் அவர்கள் உதயதாரகையின் ஆசிரியராயும் சேவை செய்துள்ளார். அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் ஆகிய அருங்குணங்கள் வாய்க்கப்பெற்ற பெரியாரின் மைந்தன், அருளையா அவர்கள் கல்வியதிகாரியாய்க் கடமையாற்றி ஓய்வுபெற்றிருக்கிறார். தந்தையின் அருங்குணங்கள் அத்தனையும் மைந்தனிடமும் உண்டு. தக்கார் தகவிலர் என்பது இவரில் புலப்படுகிறது.

மனவலி, பரிவு, பரந்த சிந்தை, சகிப்பு, நடுநிலை, தன்னடக்கம், துறவு, தியானம், அகிம்சை, நீதி, முதலிய அனைத்தும் உண்மையின் வடிவங்களே. — சிவானந்தர்

★ அறியாமை என்பது சக்திவாய்ந்த மயக்கம் ★

# களவு

களவாவது பிறருடைமையாய் இருக்கும் பொருளை அவரை வஞ்சித்துக் கொள்ளுதல். களவினுல் வரும் பொருள் வளர்வது போலத் தோன்றி, தான்போம்பொழுது பாவத்தையும் பழியையுமே நிறுத்திவிட்டு, முன்னுள்ள பொருளையும், தருமத்தையும் உடன்கொண்டு போய்விடும்.

கள்ளன் எனும் பெயர் காதிலுறக் கேட்டாலும் உள்ளங் கசந்துவிடும். களவினுல் தான் வகிக்கும் பதவியும் மானமும் போய்விடும். பிணியும் பழியும் உண்டாகும். களவு செய்யும் பொருள் சிறிதாயினும் அது நஞ்சு. சிறிய நெருப்பு பெரிய காட்டையும் அழிக்கும். சிறிய களவு பெரிய குடும்பத்தையும் அழிக்கும்.

களவு செய்தல், களவு செய்ய நினைத்தல், களவு எடு என்று கூறுதல், களவெடுக்க ஏவுதல், களவுப் பொருளை வாங்குதல் எல்லாம் இழிவும் பாவமுமாகும். களவுப் பொருளை உபயோகிப்பவருக்கும் பாவம் உண்டாகும்.

களவெடுப்போர், களவெடுக்க முயன்றவர் கடுநரகத்துக்குப் போவர் என்பதில் ஐயமில்லை. களவெடுத்தலால் புகழ் கெடுதலோடு களவெடுத்தவரின் கிளை சுற்றம் உறவு என உள்ளவர் அத்தனைபேருக்கும் அவமானமும் பாவமும் உண்டாகும்.

தனக்கு அவமானம் உண்டாகக்கூடாது என்று கருதுபவர் களவெடுக்க நினைக்கக் கூடாது. களவெடுப்பதால் பொருள் சேரும் என்று நினைக்கலாகாது. களவினுல் உள்ள பொருளும் போய்விடும். திருட்டுக் குணம் வந்தால் ஓயாத தொல்லைகளும் உடன் வந்து சேரும். திருட்டுக் குணம் உள்ளவரிடம் அன்பு, இரக்கம், அருள் முதலிய குணங்கள் உண்டாகா. அவர்கள் நிம்மதியாக வாழமாட்டார்கள். திருட்டுக்குணம் உள்ளவர்களுக்குப் புகழ், புண்ணியம், மோட்சம் என்பன கிடையா. களவு பஞ்சமா பாதகங்களில் ஒன்று.

தன்னுடைய சக்திக்கும், தகுதிக்கும் தக்க அளவோடு வாழ்க்கை நடத்தக்கூடிய மனவலிமை உள்ளவனிடம் இருட்டு அறிவான திருட்டுப் புத்தி உண்டாகாது. திருடுகின்றவன் பிற்காலத்தில் சிவனத்துக்கும் தடுமாற்றம் உண்டாகித் தவிப்பான். திருட்டினுல் சிலநாட்களுக்கு உலக சுகம் உண்டானுலும் மேலுலகம் என்பது ஒரு போதுங் கிடையாது. திருடிப் பிழைத்தவர் எவரும் வாழ்ந்ததில்லை.

## சிறு பிரசுரங்கள்

அருள்மிகு அம்பிகையின் பிரபாவத்தைப்பற்றியும், அருள்முறையைப்பற்றியும் ஆயிரக்கணக்கான பிரதிகள் வண்ணை கலட்டி அம்மன் கோயிற் கும்பாபிஷேகத்தின் போதும், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிற் பொங்கலின்போதும் இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோயிற் சித்திராபூரணைப் பொங்கலின்போதும் விநியோகமாயின. இவை மில்க்வைற் தொழிலதிபர் செய்யும் தர்மப்பணியில் ஒன்றுகும்.



## மணியுரை

ஒருவன் சம்பாதிக்கின்ற பொருள் பழியஞ்சியதாய் இருத்தல் வேண்டும்.

நாம் தேடிய பொருளைப் பகுத்து அநுபவிக்க வேண்டும்.

விதியாகிய ஊழ் ஆகூழ், போகூழ் என இருவகைப் படும்.

சோதிடம் ஒவ்வொருவருக்கும் உரிய ஊழைச் சொல்லும்.

நன்மை தீமைகளே ஊழாய் வந்து திரண்டுள்ளன.

ஊழ் அறத்தின் மூலவேர்.

அரன்றன் பாதந்தான் ஊழை நடத்துவது.

நமக்கு அறிவும் இருக்கிறது. ஆசையும் இருக்கிறது. ஆசையைச் சுத்தப்படுத்தி அறிவின் வழிப்படுத்த வேண்டும்.

பற்றுக்கள் மனிதனைக் கொல்கின்றன.

நுகரப்படும் பொருள் தூயதாக இருத்தல் வேண்டும்.


தர்மம் மிக நீளமானது. அதன் இறுதி மோட்சம்.

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்குதல் தர்மம்.

## புருஷேசதாயுஷ்

எம்மிடை வாழும் கயப்பாக்கம் சோமசுந்தரச் செட்டியார் செந்தமிழன்பும் சிவநேயமும் முற்றிப் பழுத்த முதுபெரும் புலவர். ஆயிரம் பிறைகண்ட முதுகண். ஆயிரம் பிறைகண்ட அண்ணல் அவர்கள் புருஷேசதாயுஷ் என்னும் முறையில் நூற்றுண்டு விழாக் காணும் தன்மையில் வாழ்தல் வேண்டும் என்றும் செந்தமிழும் சிவசமயமும் வளரவேண்டும் என்றும் திருவாலவாய் இறைவனை இறைஞ்சுகின்றேம். அது அவ்வண்ணமாகவே அவர் அருள்புரிவாராக. ★

★ பழத்தின் சுவையை வித்து அறியாது ★



முற்றொடர்:

# சூரிய நமஸ்காரம்

## வேதங்கள்

மாசற்ற மனத்தினராய முனிவர்கள் தாங்கள் கண்ட இறைவன் திருவுருவங்களில் ஒன்ருகச் சூரிய பகவானைத் தொழுதனர். அவர்கள் சூரியனை சுவர்ணன், சரண்யு, உஷஸ் முதலிய திருநாமங்களைக் கொண்டு துதித்தனர். சூரிய பகவானின் வரலாறு, வடிவழகு மங்கல குணங்கள் யாவும் வேதங்களில் விபரமாகக் கூறியுள்ளனர். அவர்கள் சூரியனை மித்திரன் என ஆசையோடு வழங்கினர்.

இருக்கு, வேத சுலோகங்களில் சூரியனைக் குறிக்கும் பகுதிகள் பல. ''சூரியபகவான் ஒளியில் மிதக்கும் அன்னம். பெருவானத்தில் அமர்ந்த தலைவன். யாகமுனிவன். மெய் வடிவினன். மாந்தரிடையே வாழ்பவன். அகலமான வானில் உலவுவோன், புனலன், அனலன், மெய்யன், வெப்பன், அறவோன்'' என்று பாடுகிறது ஒரு சுலோகம்:

இன்னெரு சுலோகம் சூரியதேவனின் உதய யாத்திரையை வருணிக்கிறது. ''அசுவினிகளே! இருளின் முடிவைக் கண்டு விட்டோம். தேவயானம் தெரிகிறது.'' வேறென்றுபின்வருமாறுகூறுகிறது. 'அசுவினி தேவதைகள் புதைந்திருந்த தங்கத்தைப் போலச்சூரியனை வெளிப்படுத்தினர்.''

இருக்குவேதம் மூன்று அக்கினிகளைக் கூறும். அவற்றில் ஒன்று சூரியன். சூரியனுக்கு ஏழு காரணப் பெயர்களை வேதம் கூறுகின்றது. அவை பின்வருமாறு:

1. சவிதா:— இருளை நீக்கி ஒளியுள்ள பகலைத் தருபவன்.
2. பகன்:— உலகத்தைத் தன் ஒளியால் ஒளிரச்செய்பவன்.
3. பூஷா:— உலகத்தை உரமுடைய தாக்குபவன்.
4. விஷ்ணு:— ஒளியினுல் மூவுலகத்தையும் அளப்பவன்.
5. கேசி:— இரவில் கதிர்களாகிய ரோமத்தை மடக்குபவன்.
6. வைசுவாநரன்:— உலக மக்களால் புகழப் பெறுபவன்.
7. விருஷாகபி:— செவ்வொளியுள்ள காளை போன்றவன்.

சூரியனுக்கு மூன்றுவித சக்திகள் உண்டென்பர். அவை உஷை, சூர்யா, விருஷாகபாயி என்பனவாம். உஷை உதயத்தின் முன்னும், சூர்யா நண்பகலிலும், விருஷாகபாயி அந்திப் பொழுதின் பின்பும் தொழிற்படுவன.

சூரியன் நமது கட்பொறிக்கு அதிதேவதையாய் இருக்கிறது என்றும், அது புறக்கண்களுக்கு மாத்திரமன்றி அகக் கண்ணின் ஒளிக்கும் காரணமாய் உள்ளது என்றும் வேதங்கள் கூறுகின்றன.

யசுர்வேதம் சூரியனைப் பலவாருகப் புகழ்கின்றது. சூரியனே! நீ வெற்றி உடையவன். எல்லாவற்றையும் காண்பவன். சோதியை ஆக்குபவன். உலகை ஒளிரச் செய்கின்றவன்.

சூரியனே! நீ மகான். ஆதித்யனே நீ பெரியவன். நீ பெரியவனுய் இருப்பதால் நின்பெருமையைப் போற்றுகிறேம். ஆரோக்கியத்தை விரும்பி உன்னை வணங்குகிறேம்.

# அழுக்கை நீக்குவதன் அவசியம்

நமது உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியம் வேண்டியதாயுள்ளது. அதுபோல் உடம்பில் உள்ள அழுக்கை நீக்க வேண்டியதும் அவசியமாகும். பொன், வைரம், பெற்றேலியம், முத்து முதலியவற்றை அழுக்கு நீக்கியே மதிப்பு உண்டாக்குகிறேம்.

உடம்பில் உடையில் உண்டாகும் அழுக்கை நீரினல் நீக்குகிறேம். சில அழுக்கு இலகுவாக நீங்குவதில்லை. எனவேதான் அதனை நீக்கச் சவர்க்காரத்தை உபயோகிக்கிறேம். முற்காலத்தில் உவர்மண், சாணி முதலியன உபயோகமாயின.

உடையில் உள்ள அழுக்கை நீக்க உவர்மண், சாணி உபயோகமானமுறையிலேதான். உயிரில் உள்ள ஆணவ அழுக்கை நீக்கக் கன்மமும் மாயையும் உபயோகமாகின்றன.

எம்மை வேறுவித அழுக்குகளும் சேர்வதுண்டு. தோஷங்கள் பல நம்மைச் சூழ்கின்றன. ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொருபயனுண்டு. நமது பலவித செயல்களால் தோஷங்கள் நம்மையறியாமலே உண்டாகி நம்மை நலியச் செய்வதுண்டு. தோஷங்களை நீக்குவதற்குப் பலவித கர்மங்கள் உண்டு. அவை சம்ஸ்காரங்கள் எனவும் வழங்கும்.

பரிசுத்தமாக உள்ளது குழந்தை உள்ளம். குழந்தைப் பருவத்தில் மாசுமறுவற்று இருந்த மனம் வயதேறக் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் நம்மை அறியாமலே நம் மனத்தை மாசுபடுத்தத் தொடங்கிவிடுகின்றன. மன மாசு இன்றி இருத்தலே அனைத்தறம் என்று திருவள்ளுவர் எப்பவோ அருளியுள்ளார். அதற்கு நூற்றுக்கணக்கான உரைகளும் உள்ளன.

முற்காலத்தில் குழந்தை உள்ளங்கொண்ட முனிவர்கள் இருந்தார்கள். அவர்கள் மனமாசுகள் நீங்கும் வழிகளை வேதங்களில் அருளியுள்ளார்கள். மலமாசு, மனமாசு அகன்றல் மனிதன் தேவனுகிறுன்.

அழுக்குற்ற கிணற்றைக் கலக்கி இறைத்துத் துப்புரவு செய்கிறேம். அழுக்குள்ள வயிற்றைப் பேதியுண்டு கலக்கிக் கழித்துத் தூய்மை செய்கிறேம். வயிற்றுநோய்போக மருந்துண்பது போல மனத்தாலே போக முதல்வழி கோயில் வழிபாடும் பாவமன்னிப்புக் கேட்டலும், பாவஞ் செய்யாமல் இருத்தலுமாம். ★

★ அறிவும் ஆரோக்கியமும் சமுதாயத்தை வளர்க்கும் ★

# வல்லாரை

ஆரை என்றும், போசனவல்லி என்றும், கவள மூலி என்றும், உடலந்தேற்றி என்றும் சரஸ்வதி என்றும் பிராமி என்றும் சித்தர்களாலும், வைத்தியர்களாலும் பெரிதும் போற்றப்பெறும் சிறப்புவாய்ந்த காயசித்தி மூலியே வல்லாரை.

தண்ணீர்வளமுள்ள சமவெளிகளிலும், மலையடிவாரங்களிலும் அதிகமாகச் செழித்துப் படர்ந்திருக்கும் இச்செடி, கூத்துக்குத்தாகவும் முளைத்திருக்கும். நீண்ட பசியதண்டுகளையுடைய இதன் இலைகள் பசுமையாய் வட்டமாய் இருக்கும்.

மூளையைப் பெலப்படுத்தி நினைவுச் சக்தியை அதிகரிக்கச்செய்யும் இவ்வற்புத மூலிகை பைத்தியத்தன்மையையும் போக்கும். இருதயத்தைப் பலப்படுத்துவதோடு கண் பார்வையையும் துலக்கமாக்கும். நரை திரை முதலியன வராமற் காக்கும். இரத்தக் கடுப்பு. உடம்பு எரிவு, பிரமேகம், கழிச்சல் ஆகியவற்றை நீக்கும். சுத்தமான இடத்தில் தூய்மையாக எடுத்த வல்லாரை இலைகளைப் பச்சையாகத் தின்றாலே பல நோய்கள் நீங்கும். கசநோயாளருக்கு இது கைமேற்பயனளிக்கும். குஷ்டம் முதலிய தோல் நோய்களுக்கும் புண்களுக்கும் வல்லாரை அருமருந்து. புண்களில் இதைக் கட்டினால் புண் ஆறிவிடும்.

வல்லாரையை வேருடன் பிடுங்கி நன்றாகக் கழுவி நிழலில் உலர்த்தி நெருப்பிட்டுச் சாம்பராக்கி நீரிற்கரைத்து அடையவிட்டு வடித்தெடுத்ததைக் காய்ச்சி எடுக்க உண்டாகும் வல்லாரை உப்பு மிகச்சிறந்த ஔடதமாகும். இதை மிளகுப் பிரமாணம் வெந்நீரிற் கலக்கிப் பருகி வந்தால் மிகமிக நன்று. ★

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்



ஆயிரத்துமுந்நூறாண்டுகளுக்குமுன் மூன்றாண்டுக் குழந்தை ஒரு குளக்கரையில் அழுதது. ஏன் அழுதார் என்று கேட்டவருக்கு ஒரு பெரியவர் சொன்ன பதில் இது. ''வேத விதிப்படி நிகழும் வைதிக ஒழுக்கம் தழைத்தோங்கவும், சிவாகம விதிப்படி நிகழும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சிவதர்மங்கள் விளக்கம் பெறவும், உயிர்கள் வழிவழி மேம்பாடு அடையவும் அக்குழந்தை பிறந்தது, அழுதது. அழுதபிள்ளை பால் குடிக்கும் என்பது பழமொழி. உண்மைதான். சிவபெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளிவந்து பொற்கிண்ணத்தில் ஞானப்பால் ஊட்டியருளினர். குழந்தை ஞானசம்பந்தம்பெற்று நமக்காகத் தம் பிஞ்சுக்கரம் நோவத் தாளம் போட்டுத் தேவாரத்திருப்பதிகங்களைப் பாட ஆரம்பித்தார். பெருங் கருணைக் கடலாகிய சிவபெருமான் குழந்தைக்குப் பொற்றாளங்களை அளித்தருளினர். குழந்தை அருட்பாடல்களை அருளியது. தகப்பனர் தோளிலும் பல்லக்கிலும் நடந்தும் நூற்றுக்கணக்கான திருக்கோயில்களை நமக்காக வணங்கி ஆயிரக்கணக்கான திருப்பதிகங்களைப் பாடியருளி எம்மை மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என வாழ்த்தி அந்தணர் வாழ்க, வேள்வி வாழ்க, மழை வாழ்க, பசுக்கள் வாழ்க என எமக்கு வளம் பெருக்கி எல்லா நாளும் நல்ல நாள்கள், நீங்கள் இறைவனைத் தொழுங்கள், கிரகங்கள் உம்மை நலிவு செய்யமாட்டா என்று அபயங் கூறியது. அந்தச் சிவநேயம் பெற்ற செல்வக் குழந்தை. அந்தக் குழந்தையின் சீருடைத் திருவடிகள் எமக்குத் தஞ்சம்.

# பெரியபுராணமும் பூத்தொடுத்தலும்

தமிழர் கண்ட அழகுக் கலைகளுள் பூத்தொடுத்தலும் ஒன்று. நந்தவனம் அமைத்துப் பரிபாலித்துப் பூப்பறித்துப் பலவித மாலைகள் தொடுத்துக் கோயிலுக்குக் கொடுத்தல் சரியைத் தொண்டாகக் கருதப்பட்டது. சிவனடியார் பலர் இத்திருத்தொண்டில் ஈடுபட்டிருந்தனர். பூப்பறிக்கும் விதத்தைச் சுவாமிகள் வைகறை உணர்ந்துபோந்து, புனல் மூழ்கி, வாயுங்கட்டி மொய்மலர் நெருங்குவாச நந்தன வனத்துமுன்னி என்று கூறும்போது நம் மூச்சுத்தானும் மலர்களிற் படலாகாது என்று தெரிகிறது. மலர்மாலைகள் கோவை, இண்டை, தாமம், கண்ணி, பிணையல், தொடையல், ஒவியல் எனப் பலவகைப்படும்.

இத்தகைய மாலைகளைப் புனைவதற்குப் பயன்பட்ட பலவகை மலர்களைப்பற்றிச் சுவாமிகள் ஆங்காங்கே பல இடங்களிற் பாடியிருக்கின்றார். அவரின் பன்முகஞானத்தில் மலர்களைப்பற்றிய ஞானமும் ஒன்றாகும்.

கோட்டு மலரும் நிலமலரும்  
    குளிர்நீர் மலரும் கொழுங்கொடியின்  
தோட்டு மலரும் மாமலரும்  
    சுருதி மலருந் திருவாயில்  
காட்டு முறுவல் நிலவலரக்  
    கனக வரையின் பன்னக நாண்  
பூட்டு மொருவர் திருமுடிமேல்  
    புனைய லாகும் மலர்தெரிந்து  
கொண்டு வந்து தனியிடத்தின்  
    இருந்து கோக்கும் கோவைகளும்  
இண்டைச் சுருக்கும் தாமமுடன்  
    இணைக்கும் வாச மாலைகளும்  
தண்டில் கட்டும் கண்ணிகளும்  
    தளிரிற் பிணைக்கும் பிணையல்களும்  
நுண் தா திரைக்கும் தொடையல்களும்  
    சமைத்து நுடங்கும் நூல்மார்பர்.

# ஆத்திசூடி

தமிழறியாத பிறரும் ஆத்திசூடியை அறியும்வண்ணம் ஆங்கில மொழிபெயர்ப்போடு தொழிலதிபர் கனகராசா அவர்கள் வெளியிட்ட நூலை பலரும் பாராட்டிக் கடிதம் எழுதுகிறார்கள். அவர்களுக்கு எம் நன்றி. இந்நூல் மில்க்வைற் தொழிலகத்தைத் தாபித்த அமரர் வீ. மு. கந்தையாபிள்ளையவர்களின் சிராத்த தினத்தன்று வெளியிடப்பெற்றதாகும். தாபகர் தினம் 10-4-78இல் சிறப்பாக நடைபெற்றது.

★ அன்பினால் இரக்கமும் பரந்த உள்ளமும் உண்டாகும் ★

முற்றொடர்....

# தாவர உணவும் தவ வாழ்க்கையும்

### சமயத்தலைவர்கள் சாட்சி

இனிச் சாதி, சமயம் என்னும் சார்பில் ஆராய்து பார்க்கும்போது தாவரவுணவுண்டு நற்சிந்தனையில் ஈடு பட்டு வந்தவர்கள் உயர்ந்தவர்கள் என்று கருதப்பட்டார்கள்.

சைவசமயம், பௌத்தசமயம், பாரசீகர்மதம், கிறிஸ்து மதம், இஸ்லாம்மதம் முதலிய யாவும் தாவரவுணவையே உயர்ந்ததாகப் போதிக்கின்றன. மதத்தலைவர்கள் எல்லோரும் தாவரவுணவையே விரும்பி உண்டார்கள்.

பாரசீகரின் கோட்பாட்டின்படி புனிதமான நெருப்புக்கு அண்மையில் இறந்த பிராணிகளின் உடலைக் கொண்டு வருதல் பாவம் அங்ஙனமாயின் மாமிசத்தை வேகவைத்தல் அதனிலும் கூடிய பாவம் எனக் கருதுவர்.

### நீதிகளைவகுத்தோர் நியதிகள்

நீதிச்சட்டங்களை வகுத்தவராய மநு, ஆபஸ்தம்பர் முதலானவர்களும் நீதி நூல்களை எழுதியவரான வள்ளுவர் முதலானவர்களும் ஒரு பிராணியின் உயிரைப் போக்கி உடலை உண்பதை வெகுவாகக் கண்டித்துள்ளனர். தாவர உணவுஉண்பவன் ஆயிரம் வேள்வி செய்தவனிற் பார்க்க உயர்ந்தவன் என்பதே திருவள்ளுவரின் கோட்பாடாகும்.

ஔவையார் தாம் செய்த கொன்றைவேந்தன் என்னும் நீதிநூலில் புலாலுண்ணுதலையும், உயிர்வதைசெய்தலையும், பிறர் பொருளைத் திருடுதலையும் நீ செய்யாது ஒழித்துவிடு என்னும் கருத்தில் புலையுங் கொலையுங் களவுந் தவிர் என்று ஆணித்தரமாக எழுதியுள்ளார்.

### வைத்திய விஞ்ஞானிகள் கூற்று

விட்டாமின்ஸ் எனப்படும் உயிர்ச்சத்துக்களில் A, D ஆகிய இனங்களைக் கண்டுபிடித்த நிபுணரான மிகொலம் என்பார் ''தாவரவுணவுடன் பாலும் சேர்த்து உண்பதை விடச் சிறந்த உணவு வேறு இல்லை என்பதைத் துணிந்து கூறுவேன்'' என எழுதியுள்ளார்.

கொலம்பியாப் பல்கலைக்கழகத்து உணவூட்டவளவு ஆராய்ச்சி நிபுணரான ஹென்றி ஷேர்மன் என்பார் ''தானியங்கள், கிழங்குகள், இலைவகைகளில் உள்ள உணவுச் சத்துக்கள் உடம்புக்குப் போதியனவாகும் என்று சென்ற பதினையாண்டுக்கால ஆராய்ச்சியிற் கண்டுள்ளோம்'' என்று கூறியுள்ளார்.

லண்டன் பல்கலைக்கழகத்து உயிரியல்த்துறை இரசாயன நிபுணராயிருந்த யாக்டிரமன் என்னும் பேராசிரியர், ''மாமிச உணவு உடல் வளர்ச்சிக்குத் தேவை என்று கூறுதல் பொருந்தாது. மதுபானத்திலும் பார்க்க மாமிச உணவுப் பழக்கத்தால் உடலுக்குக் கேடுண்டு எனவும் நம்பவேண்டியிருக்கிறது'' என்று எழுதியுள்ளார்.

அங்காதிபாத நிபுணரான அலெக்சாண்டர்ஹெயிக் என்பார், ''உடலியலும் நலவழியும் ஆராயப்பட்டபோது பழங்களும் காய்கறிகளும் மனிதரின் தலைசிறந்த உணவுகள் எனக் காணப்பட்டன'' என்று கூறியுள்ளார். ★

# திருநாவுக்கரசுநாயனர்



நாள்தோறும் நினைத்து வணங்கவேண்டிய நாவுக்கரசரை ஆண்டுக் கொருமுறையாயினும் வணங்குகின்ற தொண்டர் திருவடிகளுக்கு வணக்கம். மருணீக்கியார் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்ட இப்பெரியார் இளமையிலே சமணசமய சாத்திரங்களில் தேர்ச்சிபெற்றுத் தருமசேனர் என்னும் பெரும் பட்டம் பெற்றுப் பேராசிரியராக இருந்தார். முன்னமே அவர் செய்த தவவலிமையால் அவர் மீண்டும் சைவத்தைத் தழுவித் தள்ளாத வயது வரை வாழ்ந்து, நூற்றுக்கணக்கான திருக்கோயில்களை வழிபட்டு ஆயிரக் கணக்கான தேவாரத் திருப்பதிகங்களை அருளியுள்ளார்.

வினையின்பயனுக வந்த நாம் மீண்டும் வினைகளைச் செய்து விலகியிராமல், சேர வேண்டிய இடத்தை நாளிலும் பொழுதிலும் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேருமாறு அவர் எமக்கு வழிகாட்டியுள்ளார். இறைவன் எமது வினைகளையும் நோய்களையும்நீக்கி நமக்கு மேலான வாழ்வைத் தருதல் வேண்டும் என்று நாவுக்கரசர் நமக்காக வழிபட்டுள்ளார். அவர் எங்கள்மேல் கொண்டிருந்த பெருங் கருணையையும் அன்பின் முதிர்ச்சியையுங் கண்டு அவரை வணங்கிய திருஞானசம்பந்தக் குழந்தை அவரை அப்பரே! என்று அன்பொழுக அழைத்தார். அதற்கு அந்த முதியவர் அடியேன் என்று தம்மை ஒடுக்கிச் சிறியவன் தான் என்று கூறி வணங்கினுர் அப்பர். சுவாமிகள் திருவடி எமக்குத் தஞ்சம். ★

# வேப்பம் பூ

வேம்பு பங்குனி சித்திரையில் கொத்துக் கொத்தாகப் பூக்கிறது. புதுவருடத்தை வரவேற்கிறது. மலர்ந்த பூக்கள் மரத்திலிருந்து பொலபொல என்று விழுகின்றன. இரண்டு மூன்று நாள்கள் வாடிஉலராமல் வெண்ணிறமாகக் கிடக்கின்றன. அவற்றை மண்படாமல் கூட்டி எடுத்து நல்ல முறையில் பயன் படுத்தலாம். வேப்பிலையிலும் பார்க்கப் பூவில் அதி அற்புத சக்தியுண்டு. அதை உலரவிட்டு மட்பாண்டங்களில் வைத்து வேண்டிய நேரத்தில் பயன்படுத்தலாம்.

வேப்பம்பூ என்ன செய்யும் என்று நாம் கூறத் தேவையில்லை. படிப்பறிவில்லாத பட்டிக்காட்டுப் பாட்டிமாருக்கும் அதன் பயன் மனப்பாடம். வேப்பம்பூ சமிபாட்டை விருத்திசெய்கிறது. உடம்பின் உஷ்ணத்தைக் காப்பாற்றும். பித்தத்தைத் தணிக்கும். பித்த மயக்கம், தலைச்சுற்று, வாந்தி, குமட்டல், குன்மம் முதலியவற்றை உடனடியாகக் குணப்படுத்தும். வேப்பம்பூவைக் கொண்டு சம்பல் செய்து உண்பது தமிழர் வழக்கம். புதுவருடத்தில் வேப்பம்பூ கட்டாயமாக உணவில் இடம்பெறுதல் ஒரு வழக்கம். வேப்பம்பூவைத் தேனில் ஊறவிட்டு உண்ணலும் ஒருவிதம். அதை நல்ல நீரில் ஊறவிட்டு நீரைப் பருகுதல் இன்னொரு விதம். எங்கள் பாட்டிமார் வேப்பம்பூவில் பலவிதமான வடகஞ்செய்து காயவிட்டுப் பொரித்து உண்ணத்தரும் வழக்கம் மிகப் பழமையானது. உதிர்ந்து வீணுகப்போக விடாமல் வேப்பம்பூவை நன்கு பயன்படுத்துவோமாக. ★

**★ வளர்ச்சியடையவேண்டியவை அன்பும் அறமும் ★**

## நோய் நீக்கும் வேம்பு

வேம்பின் எப்பாகந்தான் நோய்க்கு மருந்தாகாது. இயற்கை அன்னை எமக்குத் தந்துள்ள மூலிகைகளுள் வேம்பும் ஒன்று. வேம்பு பராசக்தியின் பிரத்தியட்சரூபம். சாதாரண தலைவலி முதல் தவிர்க்க முடியாத குஷ்டம்வரை எல்லா நோய்களையும் போக்கும் திவ்விய மருந்து வேம்பு. வேம்பு பருவகாலந்தோறும் தனது உபகாரிப்புகளை எமக்குக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. நாம் அதன் பட்டையை வெட்டிப் படவைத்தாலும் மருந்துக்குரிய பிசினை வடித்து விட்டுப் பட்டுப்போகிறது. ஒவ்வொரு வீட்டிலும் வேம்பை விரும்பி நட்டவர் நம்முன்னோர். அதன் நோய் நீக்கும் தன்மையைக் கண்ட சித்தர்கள் அதனைத் தெய்வம் என்றே வணங்கினர், வாழ்த்தினர், போற்றினர். அதன் இலை, பூ, காய், பழம், கொட்டை, பட்டை, எண்ணெய் எல்லாமே ஔஷதத்தன்மை உள்ளன.

பங்குனி மாதத்தில் பொன்னிறமான பழுத்த இலைகளை உதிர்த்துவிட்டு பவள நிறமான குருத்துக்களை விட்டுப் பசுமையடர்ந்து கொம்பர்தோறும் வெண்ணிறப் பூக்களை மலர்த்தி நிற்கும் வேம்பின் அழகும், புனிதமும் தனித் தன்மையானவை. பச்சைப்பசேர் என்று பசுமையாகத் தனிர்த்து நிற்கும் வேம்பின் கீழ்நின்று பார்க்கும்போது கண்ணுக்கும், நுரையீரலுக்கும் நல்ல விருந்தாகின்றது. மனத்தில் ஒரு புதிய உற்சாகம் உண்டாகிறது. வேப்பிலை கிருமிகளைக் கொல்லும், தொற்று நோய்களைத் தடுக்கும்.

## அங்கும் ~~~~~~ இங்கும்

இரத்தினக்கற்களில் அலெக்சாண்டிறைற் என்னும் சிறப்புப்பெற்ற ஒரு கல் ஆறு இருத்தல் நிறையுள்ளது. வெலிகம பகுதியில் கண்டெடுக்கப்பட்டு 1889 ஆம்ஆண்டில் 5,00000 ரூபா மதிக்கப்பெற்றது.

கத்தியால் குத்திக் காயம் விளைவித்தல் குற்றம் எனச் சட்டப்பிரமாணமாக வந்தநாள் 1-8-1890 என்பர். எடுத்ததற்கும் இடுப்பிலிருந்த கத்தியை விரிக்கும் விவேகிகள் அக்காலத்தில் இலங்கையில் இருந்தனர்.

இன்று எல்லாவற்றிற்கும் விலையேற்றம் என்று தபால் செலவும் ஏறிவிட்டது. அது இனி இறங்கமாட்டாது. ஆனல் 1891ஆம்ஆண்டில் ஐந்து சதத்தோடு போஸ்ற்காட் அல்லது புதினத்தாள் உலகமெங்கும் போனது.

வெள்ளைக்காரன் பணம் வேடிக்கை காட்டின வெள்ளிப்பணம் என்று நாடோடியாக ஒருவர் பாடினதாகக் கேள்வி. அதற்குமுன் நிலவிய இரண்டு பண நாணயத்தை நீக்கிவிட்டு வெள்ளையர் 1-10-1892இல் வெள்ளிப்பணத்தை விளையாடவிட்டனர்.

அபின் செய்த அழிவுகளைக்கண்ட அறிஞர் 28000 பேர் கையெழுத்துப்போட்டு அதனைத் தடைசெய்யுமாறு 15-2-1894இல் அரசாங்கத்தைக் கேட்டனர்.

கடவுளனுபூதி பெறுவதற்கு, கலையோ விஞ்ஞானமோ உங்களுக்கு வேண்டியதில்லை. ஆனல் சிரத்தை, தூய்மை, பக்தி என்பவையே வேண்டும்.

— சுவாமி சிவானந்தர்



## சாரணீய தர்மம்

சாரணிய வாழ்வில் ஆனந்தமும் கோலாகலமுந்தருவது வெளிவாழ்க்கையாகும். மலையடிவாரத்திலும், ஆற்றங் கரையிலும், காடுகளிலும் வெளிகளிலும் கூடாரமடித்துக் கூட்டு வாழ்க்கை வாழும்போது ஒரு தனியனுபவம் உண்டாகிறது. அங்கே பறவைகள், மிருகங்களின் வாழ்க்கையையும் இயற்கையின் கோலத்தையும் சாரணர் அவதானிக்கிருர்கள் புதிய இடங்களில் புதிய அநுபவம் உண்டாகிறது. கரடு முரடான இடங்களில் காற்று, வெயில், பனி, மழை, மிருகங்கள் முதலியவற்றுக்கு அஞ்சாது வாழ்ந்து அநுபவம் உண்டாகிறது.

இன்னும் பல தொழில் நுட்பங்களை அறியக்கூடிய வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. கூடாரமடித்தல், மண் வெட்டுதல், நெருப்பு மூட்டுதல், சுவைபெறச் சமைத்தல், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல் நல்லபழக்கமாகும். வெட்டவெளி, காடுமேடு மலையடிவாரமாயின் வழிகண்டு பிடித்தல், பிராணிகளின் காலடியைக் கொண்டு அவற்றை அறிதல், அவற்றின் பழக்கவழக்கங்களை அறிதல் முதலியன நல்ல பழக்கங்களாகும். பிராணிகளைக் கண்டு பழகிய ஒருவனுக்கு அவற்றைக் கொல்லுவதற்கு மனம்வரமாட்டாது.

## பாசுபதயோகம்

சுவஸ்திகாசனம் அல்லது பத்மாசனத்தில் அமர்ந்து விநாயகர், பரமசிவன், தன்குரு முதலானவர்களை நமஸ்கரித்து நிமிர்ந்து இருந்து மூக்கின் நுனியைப் பார்க்கலாம். தனது தலையிலிருந்து பன்னிரண்டு அங்குலத்துக்குமேல் எட்டிதழ் வெண்டாமரைப்பூ இருப்பதாகவும், அது தர்மம் என்னும் கிழங்கில் இருந்து உண்டானதாகவும், தாமரையின் நடுவிலுள்ள கர்ணிகையில் பொன்வண்ணமாய், ஓங்கார வடிவமாய் பரமசிவன் பிரகாசிப்பதாகவும் தியானம் செய்யலாம். இதனல் என்னைத் தரிசித்து மோட்சம் அடையலாம். மனக்கலக்கம், கோபம், பயம், காமம், அழுக்கு முதலிய ஆபாசங்களில்லாமல் இருத்தல்வேண்டும்.

## கோபுர தரிசனம்

வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயில் இராச கோபுரத்தின் கும்பாபிஷேகம் 23-4-78 ஞாயிற்றுக்கிழமை நடந்ததை நினைவுகூறும் வண்ணம் கோபுரதரிசனம் என்னும் சிறு பிரசுரத்தை மில்க்வைற் தொழிலதிபர் வெளியிட்டு விநியோகித்தார்.

★ பரந்த உள்ளமுள்ளவன் சுயநலக்காரனுவதில்லை ★




# *Song of Unity*

**Kavi Yogi Maharishi Sudhanandha Bharathiar**

Trees are many, the grove is one;
Branches are many, tree is one;
Shores are many, sea is one;
Limbs are many, body is one;
Bodies are many, self is one;
Stares are many, shy is one;
Flowers are many, honey is one;
Pages are many, book is one;
Thoughts are many, thinker is one;
Tastes are many, taster is one;
Actors are many, the drama is one;
Nations are many, World is one;
Religions are many, Truth is one;
The wise are many, wisdom is one;
Beings are many, breath is one;
Classes are many, college is one;
Find out the one behind the many,
Then life shall enjoy peaceful harmony.

## சித்தன்கேணிச் சிரமதானப் பணி

வட்டுக்கோட்டைத் தொகுதியில் சித்தன்கேணி பெயர் பெற்ற பேரூர். அம்பலவாண நாவலரின் அரிய பணிகள் அங்கே நடைபெற்றன. சென்ற பல ஆண்டுகளாகத் தூர்ந்துபோய்க் கிடந்த கேணியைச் சிரமதானப் பணி மூலம் துப்புரவாக்கி ஆழமாக்கி நன்நிலையிற் கொண்டு வந்த பணியாளரை வெகுவாகப் பாராட்டுகிறோம்.



பேரவை உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், உதவி அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் அவர்கள் உட்படப் பலபிரமுகர்களும் பொதுமக்களும் சமுகமளித்த வேளையில் 9-4-78 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பித்த சிரம தானப் பணி தொடர்ந்து 16 குளங்களை ஆழமாக்கி இணைக்கும் வரையில் நடைபெறும் என்பதைக் கேட்டு அசந்து போனோம். சிரமதானப்பணிக்கு வேண்டிய ஆயுதங்களை மில்க்வைற் தொழிலதிபர் உபகரித்ததோடு. திரு. த. குணசேகரம் அவர்கள் எழுதிய யாழ் குடாநாடும் நீர்வளமும் நூலையும் அச்சிட்டு அன்றைய தினம் வெளி யிட்டார். திரு. திருநாவுக்கரசு அவர்கள் தமது திட்டத்தை எல்லோருக்கும் விளக்கித் தொழிலதிபரின் உபகரிப்புக்கு நன்றி தெரிவித்தார். திரு. நாக பத்மநாதன் போன்ற இளைஞர் பலர் சிரமதானப்பணியில் ஈடுபட்டுள்ளார்கள். வாழ்க அவர்கள் பணி என்று வாழ்த்துகிறோம்.

# திருநாமம்

திருமுறை தந்தவர்கள் சொல்லும் நா நமச்சிவாயவே என்றும், திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராயின் என்றும் அருளினார்கள். நமச்சிவாயத்தை நான் மறவேன் என்றார். நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே என்றார். நமச்சிவாய வாழ்க என்றார். நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும் என்றார். நமச்சிவாயக் கனி என்றார்.

இங்ஙனம் போற்றப் பெறும் திருநாமம் வேதங்களிலும் போற்றப் பெறுகிறது. புராணங்களிலும் போற்றப்பெறு கிறது. திருநாமம் ஐந்தெழுத்தும் சொல்வதால் நாம் ஈட்டிய பாவங்கள் எல்லாம் நீங்கிவிடும். ஐந்தெழுத்தும் சொல்ல வாய்ப்பில்லாதவர்கள் தீட்சைபெறாதவர்கள் சிவ சிவ என்று சொல்லலாம். சிவசிவ என்றிடில் தீவினைமாயும். அது தீவினைகளை நாசஞ்செய்யும்.


சிவசிவ என்பது திருக்கோயில்களில் மகாலிங்க வடிவாய் இருப்பது. எங்கள் உடம்பில் உயிர்போல இருப்பது. உடம்பில் உயிர் இயங்குவதற்கு அடையாளமாக இருதயம் லப்டப் என அடிக்கிறது என்று கூறுவர். அந்த ஓசை ஒலியெலாம் சிவசிவ என்பதேயாம்.

தினமும் சாயுங்காலத்தில் ஐந்துநிமிட நேரமாவது சிவசிவ என்று சிவநாமோச்சாரணஞ் செய்தல் சிவகதிக்குப் படியாகும்.

# வைகாசி

காற்றுநாள், சுளகு, சேட்டை, முறம், முற்றில், வைகாசி என்பன இம்மாதத்தின் பெயர்கள். வைகாசி என்பது வைசாசி என்பதன் திரிபாகும். சேட்டை என்பது சேஷ்டா என்பதன் திரிபாகும். சேஷ்டா என்றால் அசைவு என்பது பொருள். அது காற்றின் அசைவாகும். வைகாசி மாதத்தில் காற்றின் அசைவு பெரிதாகும்.

வைகாசி என்பது விசாகத்தோடு சம்பந்தப்பட்ட மாதம் விசாகநாளில் பூரணை உண்டாவது. விசாகத்தை ராதா எனவும் கூறுவர். அது சித்தியைத்தருவது.



முற்றொடர்:

# சோல்பரி கண்ட யாழ்நகர்ச் சுவாமி

ஒவ்வொரு பாரம்பரியமும் வாழ்ந்து வளரும் தன்மையுள்ளதாகும். இந்துநாகரிகம் அளவு கடந்த யுகங்களையும் காலவெள்ளத்தையும் கடந்தும் அது வாழ்ந்து வளரும் தன்மையில் வற்றாத தேக்கமாய் உள்ளது. இதற்குக் காரணம் அது தன் வளர்ச்சிக்காலத்தில் பெருந்தொகையான சாதனங்களைத் தழுவிச் சேர்த்துவந்துள்ளமையாகும். உண்மையில் அதன் ஏதாவது ஒரு கிளையில் மற்றக்கிளைகளில் அமைந்துள்ளவாறு உண்மைவிளக்கத்தைக் கண்டு கொள்ளலாம். எனவேதான் இந்துசமயத்தைச் சமயங்களின் தாய் என்று எல்லோரும் கூறுகிறார்கள்.

மேற்கு நாட்டவரின் இந்துசமய அறிவு, புத்தகங்களிலிருந்து பெற்றதாகும். இந்நூல்களுள் நூல்கள் புறநடையாய் இருந்தபோதிலும் பெரும்பாலும் உபநிடதங்களுக்குத் தற்காலத்தில் எழுதப்பட்ட விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டனவாயும், சங்கராச்சாரியாரின் உரையினைத் தழுவியதாயும் இருப்பன.

நான்கு வேதங்களில் ஒவ்வொன்றும் கர்மகாண்டம், ஞானகாண்டம் என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கர்மகாண்டத்தில் குறிக்கப்பட்ட வேத சுலோகங்கள், கிரியைகள் செய்யும்போது ஓதவேண்டியனவாகும். உபநிடதங்கள் யாவும் ஞானகாண்டத் தொகுப்பில் உள்ளனவாகும்.

சங்கராச்சாரியாரின் உபநிடத விளக்கங்களின் அடிப்படையும், கோட்பாடும் அத்வைத வேதாந்தம் என வழங்குகிறது. அது நொய்மை நுணுக்கமான எழுத்துத் துறையில் உண்மையை நெருங்கி அணுகுவதற்குச் சாதனமாயுள்ளது. உண்மையை அணுகுவதற்கு நேர்முகசம்பாஷணமே வழியாகும்.

உண்மை என்பது மனதுக்கும் மூளைத் திறத்துக்கும் அப்பாற்பட்டதாகும் என்று உபநிடதங்கள் பலவிடங்களிலும் அழுத்தந் திருத்தமாக ஆணையிட்டுக் கூறுகின்றன. அன்றி வெறும் அறிவியல் தத்துவ விளக்கமும், அறிவாற்றல் சார்ந்த விளக்கமும் ஆழமாகப் பரந்து நுணுக்கமாய் இருந்தபோதிலும் உண்மையை அறிய உதவமாட்டா. தெளிவாக உணர்ந்தே அறிதல் வேண்டும்.

அத்வைதம் என்பது இரண்டு அல்ல என்பதைக் குறிப்பதாகும். அது துவைதம் அல்லாதது.

குறிப்பு: சுருதி கேட்கப்பெற்றது என்பதை மேற்கு நாட்டவர் சென்யோன் என்பவர் பத்மோஸ் என்னும் இடத்தில் விவிலிய நற்செய்தி கேட்ட வரலாற்றை அறிவர்.

உண்மையைப்பற்றி யேசுநாதர் கூறும்போது நானே உண்மை என்றார். இன்னும் பொன்ரியுஸ் பைலேற் என்பார் உண்மையாவது என்ன என்று கேட்டபோது யேசுநாதர் விடைகூறவில்லை.

— தொடரும்

## அன்றும் இன்றும்

மக்கள் தமக்கு என்றும் ஒளியென்னும் தேஜஸைக் கொடுக்கக்கூடிய பிரம்ம வித்தையையே கல்வியாகக் கொண்டனர். அதனால் ஒழுக்கமும் சீலமும் நெறிதவறாத மனப்பண்பும் அன்றைய மக்களிடம் இயற்கையாக இருந்தன. உலகத்துக்காக வாழ்வதே வாழ்வின் இலட்சியமாக இருந்தது.

உண்மை என்றும் அழியவில்லை, அது மாறவுமில்லை. உண்மை சில சமயம் மறைந்திருந்தாலும் அது மீண்டும் துளிர்த்து வளர்ந்து வந்துள்ளது. மக்க்ள் மீண்டும் தெய்விகப் பாதையை நோக்குகிறார்கள். விஞ்ஞான அறிவோடு மெய்ஞ்ஞானத்தையும் அவாவுகிறார்கள். தத்துவ விசாரணை செய்கிறார்கள். சமயப்பண்பாட்டினைப் பட்டத்தின் மேற்படிப்பாகவும் கொள்கிறார்கள். மக்களுக்கு உயர்வைத் தரவல்ல தத்துவ அறிவு வெகுவாகப் பரந்து வருகிறது.

புராதனமானதும் புதுமையானதும் புதிரானதுமான தத்துவ அறிவு மக்களுக்கு மனமகிழ்ச்சியையும் திருப்தியையும் ஈடேற்றத்தையும் தருவது. மக்களுக்கு ஞான தாகத்தைப் போன்ற உயர்ந்த தாகம் உலகில் இல்லை. தாகமுள்ளவர்களுக்கு ஞான தானம் செய்வதே மேலான தானம். ஞானம் இல்லாமல் என்னுடையரேனும் அவர் எதுவும் இல்லாதவராவர். ஞானம் இல்லாதவர் தம் வாழ்வைப் பாழ்படுத்தியவராவர். இறைவன் திருவடிப்பற்று ஒன்றே எம்மை வாழ்விக்கும் காக்கும் முத்திதரும்.


MWS மில்க்வைற்

# மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப்பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


தன் உயிருக்கு அபாயம் ஏற்படத்தக்க தறுவாயிலும் இவ்வுலகில் உண்மை உரைப்போன் உண்மையாக உயர் மகனே. அனைவரும் பின்பற்றி நடப்பதற்கு அவன் ஒரு முன்மாதிரியானவன். அவன் எல்லாக் கஷ்டங்களையும் மேற்கொள்வதில் சித்தியடைகிறான்

— சுவாமி சிவானந்தர்

★ நம் முன்னோர்கள் அமிசமே நாம் ★

# இருடிகள்

இருடிகளை ரிஷிகள் என்று கூறுவர். அவர்கள் முற்றுந் துறந்த முனிவர்கள். அவர்கள் பற்பல கோத்திரங்களில் வந்தவர்கள். அவர்கள் வந்த மூலத்தை விசாரிக்கலாகாது என்பர்.

ரிஷி என்றால் வேத மந்திரங்களை ஞான திருஷ்டியால் கண்டவர் என்று பொருள். அவர்கள் மந்திர திருஷ்டாக்கள். அவர்கள் இருதயம் மனம் செவி மிகவும் பரிசுத்த மானவை. இறைவாக்குக்களை அவர்களின் பரிசுத்தமான செவிகள் கேட்டறியும். அவர்கள் கேட்டறிந்தவை சுருதிகள் எனப்படும். சுருதிகளைக்கேட்கச் சுரோத்தம் என்னும் செவிப்புலன் பரிசுத்தமாயிருக்கும். அவர்கள் சிந்தனை தூய்மையானது. அதிலே தோன்றியவை ஸ்மிருதிகள் எனப்படும். அவர்கள் நினைப்பவையும், கேட்பவையும் பரிசுத்தமானவைகளாய் உலக நன்மைக்கு உபகரிப்பனவாய் அமையும்.

ரிஷிகள் பலவிதமான போக்குள்ளவர்கள். அவர்கள் சிந்தனையும் செயலும் உலக நன்மையின் பொருட்டாக அமையும். தேவரிஷி, இராசரிஷி, பிரம்மரிஷி, மகரிஷி முதலானோரால் உலகமுய்கிறது- நாரதர், தேவரிஷி- வசிட்டர், பிரம்ம ரிஷி, ஜனகர்- இராஜ ரிஷி எனப் பெயர் பெற்றவர்கள். சூரிய கிரணம் எங்களுக்கு அதிகமாயிருக்கக்கூடாது என்று எங்கள் நன்மை கருதிப் பல்லாயிரம் ரிஷிகள் வெப்பத்தைத் தாங்குகிறார்கள். இவர்கள் உடலைத் தியாகஞ் செய்த உத்தமர்கள். பாரதம் இராமாயணம் ஆகிய இதிகாசங்களைத் தந்தவரான வியாசரும் வால்மீகியும் பாரத நாட்டுக்கு இருகண்கள் எனப் போற்றப்பெறுவர்.

இன்னும் வசிட்டர், பரத்துவாசர், கௌதமர், கசியபர், அத்திரி, ஜமதக்கினி, விசுவாமித்திரர் என்னும் ஏழு முனிவர்களும் சப்தரிஷிகள் எனப் பெயர்பெற்ற கூட்டத்தவர். இவர்களுள் சிரேட்டரான வசிட்டரின் மனைவி அருந்ததி என்பாள் பதிவிரதையாகவும், தீர்க்க சுமங்கலியாகவும் உள்ளவள். யாவராலும் போற்றப் பெறுபவள். அவளைப்போல நமது பெண்களும் வாழவேண்டும் என்பதற்காகவே திருமணத் தம்பதிகள் அவளுக்கு வணக்கஞ் செய்கிறார்கள். வசிட்டர் இல்லறமாகிய நல்லறம் நடத்துவதில் சிறந்தவர். அரசர்களுக்குக் குருவாக இருந்தவர். பிரம்மதேஜோ பலம் பெற்றவர். ★

## அடிக்கல் நாட்டு விழா

யாழ் வளாகத்துக்கு முன்னுள்ள ஆத்திசூடி சனசமூக நிலையத்துக்கான மண்டபத்துக்கு 21-4-78 வெள்ளி காலை மில்க்வைற் தொழிலதிபர் அடிக்கல் நாட்டினார். அவ்வமயம் S. T. R. பிலிம்ஸ் உரிமையாளர் S. தியாகராசா அவர்கள் மங்கள விளக்கேற்றினார்கள்.

## ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்

தொழிலதிபர் கனகராசா அவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்ததோடு பாதுகாவலருள் ஒருவராயும் இருக்கும் இச்சனசமூக நிலையம் 18-4-78 முதல் பொது மக்களுக்கும், மாணவருக்கும் வாசிப்பதற்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்து நிலவும்.

## மாதர் பகுதி

### விநோபாஜி

பெண்கள் மாத்திரமே அமைதியாகவும் ஆக்கபூர்வமாகவும் புரட்சி செய்ய வல்லவர்கள். இவ்வுலக இன்பங்களைத் துறந்து வாழக்கூடிய பற்றற்ற தூயதிருவுருவம் பெண்ணேயாவாள்.

வீண்பேச்சு, வதந்தி, சச்சரவு, நிந்தை முதலியவற்றைப் பெண்கள் பேசலாகாது. இரக்கமுள்ள இருதயமே தோட்டமாகும். நற்சிந்தனைகள் நல்ல விதைகளாகும், இனியவை கூறல் மலர்களாகும். நற்செயல்கள் கனிகளாகும்.

எவ்விதமான டாம்பீகச் செலவுகளையும் தவிர்த்துத் தன்னலமற்ற செயல்களில் ஈடுபடுதல் நல்லது. தர்ம வழியிலே தூய முறையிலே உழைத்த ஊதியத்தையே தீண்டுதல் வேண்டும். இலஞ்சம் முதலிய ஊழல்கள் நாட்டில் நிலவாதிருப்பதற்குக்காவல்செய்தல் வேண்டும்.

பிள்ளைகள் மீது வன்மையாகவோ குரூரமாகவோ இருத்தலாகாது. எக்காரணங் கொண்டும் பிள்ளைகளை இகழலாகாது. அவர்களை அதிர்ச்சியடையச் செய்யலாகாது. அவர்களை உள்ளார அன்புடன் கவனியுங்கள்.

சீதனம் கொடுப்பதையும், ஏற்பதையும் தவிருங்கள். திருமணம் என்பது பண்டமாற்று வியாபாரம் அன்று.



## Divine Nectar

by


### Swami Sivananda

1. Do not spend your time in idle talk.
2. Flatterer is the most dangerous enemy.
3. Adversity is the good soil for Vertue.
4. Speak little read much, think more.
5. Never speak ill of any one.
6. Suffering is a great purifier.
7. Evil is born of ignorance.
8. The real heaven is a pure heart.
9. He who can obey can command others.
10. Make others happy. You will be happy.

உண்மையே கடமை; உண்மையே தவம்; உண்மையே யோகம்; உண்மையே தனிமுதல்; உண்மையே பரம புகலிடம். பெரும் மதிப்புணர்ச்சியுடன் உண்மைக்கு வணக்கம் செலுத்துக.

— சுவாமி சிவானந்தர்

**சாஸ்திரஞானம் மட்டும் உள்ளவன் படித்த முட்டாள்**



# மே தினம்

மெயுஸ் என்னும் லத்தீன் பெயர் சமஸ்கிருதமொழி வழிப் பிறந்தது. அது வளர்ச்சியைக் குறிப்பது. பயிர்கள் செடிகள் மரங்கள் தளிர்த்துப் பூத்துக் காய்த்து வளம் பெறுங்காலம் இது. மெயுஸ் என்னும் பெயரடியாக வந்தது மே என்னும் மாதப் பெயர். இது ஆங்கில முறையில் ஐந்தாவது மாதமாகும்.

ஆண்டுதோறும் மே மாதத்தின் முதல் நாள் அகில மெங்கும் மே தினம் எனக் கொண்டாடப்படுகிறது. தொழிலாளரின் தினமாகத் தொழிலின் மகத்துவத்தைக் குறிப்பதாக அது அமைகிறது, உழவும் அதன்பின் வந்த நெசவு முதலாய தொழில்களும் மக்களின் வாழ்வுக்கு வழி வகுப்பன. எனவேதான் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியார் பாடினார். யோகசுவாமிகள் தொழிலை வெகுவாகப் போற்றி, செய்யுந் தொழிலே தெய்வம் என்றார்.

மேற்கு நாடுகளில் மேதினம் பருவகால விழாநாளாகவும் அகில உலக தொழிலாளர் ஐக்கியத்தைக் குறிக்கும் தினமாகவும் கொண்டாடப்படுகிறது. மிகப் பழைய காலத்தில் பாரதநாட்டில் இந்திரவிழா இங்ஙனமே நடைபெற்றது. உலகத் தொழிலாளர் ஒன்றுபடவும் உழைக்கும் கரங்கள் உயரவும் எங்கள் வாழ்த்து.

---

## Proverbs of many Lands

1. A lie has no legs but fast moving Wings.
2. Kindness is more bending than a loan.
3. Pinch your self and know how others feel.
4. Do not do what is already done.
5. Flattery is worse than abuse.
6. Love and musk do not remain consealed.
7. Peace at first is better than war at last.
8. The Cure for anger is silence.
9. When money speaks truth keeps silent.
10. Belief is easier than investigation.

# வழிபாடு

இறைவனை மனத்தால் நினைத்தும் வாக்கால் வாழ்த்தியும், தலையால் வணங்கியும், அன்பைச் செலுத்துதலே வழிபாடாகும். வழிபாட்டுக்குரியவர் எங்கும் நிறைந்த இறைவனேயாவர்.

வழிபாடு என்பது அவரவர் அறிவுநிலை, அன்புநிலை, ஆர்வநிலை பழக்கவழக்கங்கள் ஆகிய சூழ்நிலையைப் பொறுத்து அமைகிறது. வழிபாட்டை பூஜை என்றுங் கூறுவர். பூ என்றால் எல்லா வினைகளையும் நீக்குவது என்றும், ஜை என்பது ஞானம் வெளிப்படுதலைக் குறிப்பது என்றும் காரணாகமம் கருத்துக் கூறுகிறது.

நாம் ஆறறிவுடையவர்களாதலால் இது நல்லது இது தீயது என்று பகுத்தறியக்கூடிய புத்தியுள்ளவர்கள். எனவே இவற்றை உணர்ந்து செய்வன புத்திபூர்வம் எனப்படும். சிலசமயம் புத்தியால் ஆராயாது செய்வனவும் உண்டு. அவை அபுத்திபூர்வம் எனப்படும். இவ்வாறான செயல்களான நல்வினை தீவினை என்பன பயனை விரும்பிச் செய்யும்போது காமியம் என்றும், பயன் கருதாமற் செய்யும்போது நிஷ்காமியம் எனவும் அமையும்.

இவற்றுள் நிஷ்காமியம் என்னும் பயன்கருதாத நல்வினைகள் மிகவும் உயர்ந்தவையாகும். இவற்றைவிட அஞ்ஞானங் காரணமாக நாம் செய்கின்ற தீவினைகள் பல. நாம் செய்யும் தீவினைகள் குவிந்து கன்மம் என்னும் பழவினையாகத் திரளும். அவை எம்மைப் பிறவிகளில் ஆழ்த்தும். நாம் செய்தனவற்றைப் பிறவிகள் தோறும் அநுபவித்தல் வேண்டிவரும். வினைத்துன்பங்கள் நீங்கினால் ஞானம் உண்டாகும். இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் நிகழ்வதற்கு வழிபாடு இன்றியமையாதது.

நாம் செய்து திரண்டு கிடக்கும் வினைத்தொகுதி சஞ்சிதம் எனப்படும். அதிலிருந்து நாம் ஒரு பிறவியில் அநுபவிக்கவேண்டிய பகுதியாய வினை பிராரத்தம் எனப்படும். பிறவியிலே பிராரத்தத்தை அநுபவித்துக்கொண்டே மேலும் வினை செய்கிறோம். இவ்வினை ஆகாமியம் எனப்படும். பிராரத்த வினை அநுபவித்தே தீரவேண்டியது. அந்த வினை முடிந்ததும் எஞ்சியுள்ள சஞ்சிதத்துக்குத்தக்கதாக மறுபிறவி எடுத்தல் வேண்டும்.

ஆனால் இந்த சஞ்சிதத் தொகுதியை நீக்குவதற்குச் சிறந்தவழி வழிபாடு அன்றி எடுத்துக்கொண்ட பிராரத்த வினையின் தாக்குதலை ஓரளவு தணிப்பதற்கும் வழிபாடு பயன்தருகிறது.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவர் அச்சோவே.

---

சிரத்தையே சக்தி, சிரத்தையே பலம், சிரத்தையே மிகு ஆற்றல்.

சிரத்தையே சமயத்தின் ஆன்மா. அது புது நம்பிக்கைகளை உண்டாக்கி அமிருத்துவத்திற்குக் கருத்தை எழுப்புகிறது.
— சுவாமி சிவானந்தர்.

---

★ சுயநலத்துக்குக் காரணம் அறியாமை ★

## மாண்புமிகு ஆர். ஆர். திவாகர்

தலைசிறந்த தேசாபிமானியும், தத்துவப்பேராசிரியரும், அரசியல் மேதையும், முன்னாள் ஆளுனரும், பாரத அரசின் மந்திரியும், ஞானியுமாகிய இரங்கநாத இராமச்சந்திர திவாகர் அவர்கள் ஈழத்திருநாட்டுக்கு வருகைதந்து யாழ் வளாகத்திலும், வீரசிங்க மண்டபத்திலும் உரை நிகழ்த்தினார். காந்தியடிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்ட திவாகர் அவர்கள் இலங்கையில் காந்திப் பக்தர்களையும் கண்டு கலந்துரையாடினார்.

கிளிநொச்சியிலுள்ள உருத்திரபுரத்துக் காந்தி சேவா சங்கத்தையும் பார்த்து ஆசிவழங்கினார். பெரிய பதவியில் இருந்து இளைப்பாறிய திவாகர் இளமையில் ஆங்கிலப் பேராசிரியராயும், பத்திரிகையாளராயும் இருந்தவர். காந்தியடிகளோடு தொடர்பு கொண்டு கர்நாடக மாநிலத்துக் காங்கிரஸ் தலைவராயும் இருந்தார்.

வடமொழி வல்ல திவாகர் மகான் அரவிந்தரிடத்தும், இராமகிருஷ்ணரிடத்தும் பக்தியுள்ளவர். மகாயோகி என்னும், பரமஹம்சர் என்றும் பெயருள்ள இரு பெரு நூல்களை ஆக்கியதோடு பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

## அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

1. தன்னை மறந்திருப்பவன் தெய்வசொரூபமாகிறான்.
2. நெறி பிறழ்பவரிடம் புகழ் இருக்கமாட்டாது.
3. கவலைப்படுபவன் காரியசித்தி அடைவதில்லை.
4. ஆசையைவிட்டு அருளைச்சார்பவன் பாக்கியவான்.
5. செயலில் ஈடுபடாத நாள் மோசமான நாள்.
6. நாம் நலத்தை நன்கு செய்தல் வேண்டும்.
7. ஒரு லட்சியத்துக்குத் தன்னைக் கொடுக்கலாம்.
8. தூய அன்பு அமைதிக்கு இருப்பிடம்
9. பரத்துக்கு அடிபணிபவனை உலகம் அடிபணிகிறது.
10. உள்ளத்தை வென்றால் உலகை வெல்லலாம்.

### சுவேதாச்வதரோபநிஷதம்

எந்த ஒரு பரமன் 'பிரகிருதியின்' பிறப்பிடங்களையெல்லாம் தலைமை தாங்குகிறானோ, எவனிடத்து 'இவை யாவும் ஒடுங்குகின்றனவோ, எவன் பலவடிவங்களை எடுக்க வல்லவனோ, அந்த ஈசனை, வரங்கொடுக்கிறவனை, போற்றுதற்குரியவனை, பிரகாசமானவனை அநுபூதியில் அறிகின்றவன் அளவு கடந்த சக்தியை அடைகிறான்.

தீயபழக்கங்களை எதிர் நற்பழக்கங்களால் அடக்குக. நீங்கள் பழக்கங்களின் ஒரு மூட்டையே. சீலம் பலகாற் செய்த பழக்கங்களே. — சுவாமி சிவானந்தர்

Aum

## So Said Swami Sivananda

The scriptures declare that the gift of knowledge is the greatest charity. Physical hunger, when appeased, re appears in a few hours. Perishable objects offered to appease the appetite of [the] senses only [make the senses more hungry and greedy. But the gift of knowledge appeases the mans inner most appetites and cravings and enables him to enjoy pease and satisfaction for ever. The man who has assimilated this knowledge craves not for the objects of the senses, the comforts and luxuries of a material life; he rests in his own Satchidananda Swarup and enjoys Immortality Eternal Bliss and Perenial Peace.


மில்க்வைற் தயாரிப்புகளில்
உங்களுக்குச்

★ சிறந்தது
★ சிக்கனமானது
★ நுரைவளம் உள்ளது
★ அழுக்கை உடனடியாகப் போக்குவது
★ துண்டு துண்டுகளாக வெட்டி உங்கள் தேவைக்கு உபயோகிக்கக்கூடியது




மில்க்வைற் பார் சோப்


எங்ஙனம் ஒரு பெண்ணின் முகத்தில் ஒரு வெண்புள்ளி அல்லது வெண்குட்டப் பொத்து அவளது அழகைக் கெடுக்கிறதோ, அங்ஙனமே நன்மதிப்புடைய ஒரு மனிதனின் சீலத்தில் ஒரு சிறு மாசு அவனது பெயரைக் கெடுக்கிறது.

— சுவாமி சிவானந்தர்

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்: "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-5-78.